செய்தி வெளியீடு எண் : 996 நாள் : 19.07.2024

## செய்தி வெளியீடு

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று நாட்டின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்று, கல்வி பயிலவிருக்கும் 8 மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டி, வாழ்த்து தெரிவித்து மடிக்கணினிகளை வழங்கினார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (19.7.2024) தலைமைச் செயலகத்தில், 2023–2024 ஆம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, நாட்டின் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள 8 மாணவ, மாணவியர்களை பாராட்டி, வாழ்த்து தெரிவித்து மடிக்கணினிகளை வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக–பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி மாணவ, மாணவியர்கள் நாட்டின் முன்னணி கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலும் வகையில் "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் JEE / CLAT போன்ற பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்றிடும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, JEE / CLAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்று, சென்னை, IIT–ல் பயில தேர்ச்சி பெற்றுள்ள விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவர் சி. பார்த்தசாரதி, திருச்சி NIT–ல் பயில தேர்ச்சி பெற்றுள்ள சேலம் மாவட்டம்,

கரியகோவில்வலவு, அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி எல். சுகன்யா, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்ன இலுப்பூர், அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி எம். ரோகிணி, Tamil Nadu National Law University–ல் பயில தேர்ச்சி பெற்றுள்ள நீலகிரி மாவட்டம், மு. பாலாடா, ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளி மாணவர் ஏ. அஜய், தரமணி – National Institute of Fashion Technology பயில தேர்ச்சி பெற்றுள்ள திருவண்ணாமலை மாவட்டம், புளியம்பட்டி, ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளி மாணவியர் கே. மீனா மற்றும் எஸ். துர்கா, கள்ளக்குறிச்சி மாவட்டம், மணியார்பாளையம், அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி மாணவி இ.பழனியம்மாள் மற்றும் மாணவர் கே. தவமணி, ஆகிய 8 மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அம்மாணவ, மாணவியர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்து, மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர் திரு.எஸ்.அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu